HGH INDIA® 2024
HOME DECOR ▪▪▪ GIFTS ▪▪▪ HOUSEWARE
July 02-05, 2024
Bombay Exibition Centre, Mumbai

NEWS 1
A TEXZONE Event
www.hghindia.com

Where business feels at home!

15 வது பதிப்பு

# வாருங்கள் வணிகத்தை மேம்படுத்திடுவோம்!

## 2,500 வீட்டு பொருட்கள் + புதுமைகள் + டிரெண்ட்கள் 2024/25
## வீட்டு மேம்பாட்டு தீர்வுகள் + புதிய வணிக யோசனைகள்

15வது முறையாக, HGH இந்தியா, வரவிருக்கும் இந்திய ரீடெய்ல் சீசனுக்கான புதுமைகள், டிரெண்ட்கள் மற்றும் மார்க்கெட்டிங் திட்டங்கள் தொடர்பான வணிகம் குறித்து கலந்துரையாடுவதற்காக, 32 நாடுகளில் இருந்து முன்னணி பிராண்ட்கள், உற்பத்தியாளர்கள், இம்போர்டர்கள், ரீடெய்லர்கள், ஆர்க்கிடெக்ட்கள், வீடு சார்ந்த துறையில் உள்ள நிறுவன பையர்களை ஒன்று கூட்டுகிறது. HGH இந்தியா, இந்திய சந்தையில் வீட்டு ஜவுளி, வீட்டு அலங்காரம், வீட்டு ஃபர்னிச்சர், வீட்டுப் பொருட்கள் மற்றும் பரிசு பொருட்களுக்காக ஆண்டுக்கு இரு முறை நடக்கும் வர்த்தக கண்காட்சி, ஜூலை 2-5, 2024 மும்பையில் உள்ள பாம்பே எக்ஸிபிஷன் சென்டரில் நடக்கவுள்ளது. 50,000 சதுர மீட்டரில் 4 ஹால்களைக் கொண்டுள்ளது, ஹோம் டெக்ஸ்டைல்ஸ் & பர்னிஷிங்ஸ் (ஹால் 1), ஹோம் டெக்கர் (ஹால் 2), ஹோம் ஃபர்னிச்சர் (ஹால் 3) மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் & கிஃப்ட்ஸ் (ஹால் 4) என நான்கு முக்கியமான பிரிவுகளாகக் கண்காட்சியாளர்கள் பிரிக்கப்பட்டுள்ளார்கள். உங்களின் சௌகரியத்திற்காக, உங்களுக்கு விருப்பமான பொருள் வகை மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் ஹால் 1, ஹால் 3 அல்லது ஹால் 4-இல் பார்வையாளர் பதிவை மேற்கொள்ளலாம்.

ஹோம் ரீடெய்லர்கள், டிஸ்ட்ரிப்யூட்டர்கள், இண்டீரியர் டிசைனர்கள் மற்றும் நிறுவன ரீதியான பையர்களுக்காக முன்னணி பிராண்ட்கள் மற்றும் உற்பத்தியாளர்களால் HGH இந்தியாவில் 2,500 **புதுமையான பொருட்கள்** அறிமுகம் செய்யப்படவுள்ளன. 32 நாடுகளிலிருந்து தங்களின் பலவகையான தயாரிப்புகளை நேரடியாக அல்லது தங்களின் இந்திய பார்ட்னர்கள் மூலம் காட்சிப்படுத்தும் 700 இந்திய மற்றும் சர்வதேச பிராண்ட்கள் & உற்பத்தியாளர்களின் மத்தியில், **ஜெர்மனி, ஹாங்காங், மலேசியா, ரஷ்யா மற்றும் உக்ரைன்** நாடுகளிலிருந்து புதிய கண்காட்சியாளர்களும் தங்களின் பலவகையான **ஹோம் ஃபர்னிச்சர்,**




**வால்பேப்பர், ஹோம் டெக்கர், ஹவுஸ்வேர்** மற்றும் **இன்டீரியர் பொருட்களைக்** கட்சிப்படுத்துகிறார்கல். இந்தியாவிலிருந்து மட்டுமே **120 புதிய கண்காட்சியாளர்கள்** தங்களின் பலவகையான ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்ஸ், பெட் & பாத் மேட்-அப்ஸ், அலங்கார பொருட்கள், ஹோம் ஃபர்னிச்சர், கைவினை பொருட்கள், குக்வேர், ஹவுஸ்வேர், கிஃப்ட்ஸ் மற்றும் இன்னும் பலவற்றை முதல்முறையாகக் காட்சிப்படுத்துகிறார்கள். வேர்ல்டு ஆஃப் ஸ்லீப், ஹோம் பர்னிச்சர் மற்றும் ஸ்மார்ட் கிச்சன் போன்ற சிறப்பு கவனம் செலுத்தப்படும் பகுதிகள் இந்த வகைகளில் உள்ள பொருட்களின் டிரெண்ட்களை முன்னிலைப்படுத்தும்.

7% GDP வளர்ச்சியால் தூண்டப்பட்ட செலவழிக்கக்கூடிய வருமான அதிகரிப்பால், இந்திய நுகர்வோர்கள் சிறந்த தயாரிப்புகளை, அதிகமான சௌகரியத்தை மற்றும் சிறந்த வாழ்க்கைமுறையை நாடுகின்றனர். இது அவர்களின் வீட்டு உபயோக பொருட்களின் தேர்விலும் பிரதிபலிக்கிறது. இளம் இந்திய நுகர்வோர்கள் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் கல்வி மற்றும் உயர் சர்வதேச வெளிப்பாட்டின் காரணமாக, வடிவமைப்பு, வண்ணங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றின் அறியும்

**ஹோம் டெக்ஸ்டைல்ஸ் முதல் ஹோம் ஃபர்னிச்சர் வரை; மெத்தைகள் முதல் சோஃபா, குஷன் கவர்கள் மற்றும் ரெடிமேட் கர்டெயின்கள் வரை; அலுவலக ஃபர்னிச்சர் முதல் டெகரேட்டிவ் பொருட்கள் வரை; சமையல் பாத்திரங்கள் முதல் கிச்சன்வே, டேபிள்வேர் பொருட்கள் வரை HGH இந்தியாவில் பல்வேறு தயாரிப்புகளை காணலாம்.**

திறனையும் பெற்றுள்ளனர். ரீடெய்லர்கள் தங்களின் தேவைகளுக்கேற்ற பல்வேறு புதுமையான தயாரிப்புகளை HGH இந்தியாவில் காண்பார்கள்.

இந்தியா முழுவதும் 600-க்கும் மேற்பட்ட நகரங்களிலிருந்து வரும் பார்வையாளர் முன்பதிவுகளானது, எப்போதும் வளர்ந்துகொண்டிருக்கும் இந்திய சந்தையில் புதிய வணிக வாய்ப்புகளை ஆராய்ந்து தங்கள் போட்டியாளர்களை விட முன்னணியில் இருப்பதற்காக HGH இந்தியாவிற்கு மீண்டும் வருகை தருவதற்கான வர்த்தகத்தின் மிகுதியான ஆர்வத்தை தெளிவாகப் பிரதிபலிக்கிறது. இது பலவகையான வீட்டு மேம்பாட்டு பொருட்கள் மூலம் வரவிருக்கும் தீபாவளி சீசன் ரீடெய்ல் சேல்ஸில் வர்த்தகம் வைத்திருக்கும் அதிகமான நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. ஏற்கனவே உள்ள அறிகுறிகளின்படி, மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கையானது கடந்த ஜூலை மாதத்தின் 41,240 பார்வையாளர்களை விட அதிகமாவதற்கான வாய்ப்புள்ளது.

2023 தீபாவளி முதல் ஒரு வார கால கோரிக்கைக்கு பின் நடத்தப்படும் வரவிருக்கும் HGH இந்தியா, வர்த்தகம் மற்றும் தொழில்துறையால் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்நோக்கப்படுகிறது. 2022-இல், சர்வதேச நோய் பரவலுக்கு பிந்தைய சூழ்நிலையில் நுகர்வோர்கள் தங்களின் வீடுகளின் மீது அதிகமாக செலவு செய்துள்ளனர் மற்றும் தங்களுக்கான ஆடை, பயணம், சமூகமயமாக்கல் மற்றும் வெளிப்புற நடவடிக்கைகளில் குறைவாக செலவு செய்துள்ளனர். எனவே, இதில் 2023-24 காலகட்டத்தில் அதிகமாக செலவு செய்தார்கள், மேலும் அதனால் இப்போது வரவிருக்கும் தீபாவளி சீசனில் மீண்டும் தங்களின் வீட்டின் மீது செலவு செய்யப்போகிறார்கள். ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஃபர்னிஷிங்ஸ், ஹோம் ஃபர்னிச்சர், டெக்கர் மற்றும் ஹவுஸ்வேர் பொருட்களின் பல முன்னணி ரீடெய்லர்கள், டிஸ்ட்ரிப்யூட்டர்கள் மற்றும் பிராண்ட்களும் இந்த கருத்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, 15வது HGH இந்தியா தேவைக்கான பெரிய உந்துதலை வழங்கி சந்தை மனநிலைகளை மீட்டெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்பார்த்ததை போல், அதே நேரத்தில், ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்ஸ், ஹோம் டெக்கர், ஹோம் ஃபர்னிச்சர் மற்றும் ஹவுஸ்வேரை ஒருங்கிணைப்பது இந்தியா முழுவதும் உள்ள ரீடெய்ல் கடைகளில் வெளிப்படையாகத் தெரிகின்றன. பெரும்பாலான ரீடெய்லர்கள் விற்பனைகளை அதிகரித்து, தங்களின் வாடிக்கையாளர்களைத் தக்கவைப்பதற்காக ஒரே கூரையின் கீழ் முழுமையான வீட்டு தீர்வுகளை வழங்குவதை நோக்கி செல்கிறார்கள்.

புதுமைகள் | டிரெண்டுகள் | ப்ராடக்ட்கள் | சோர்ஸஸ் | வாய்ப்புகள்

**32 நாடுகள் | 120க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் | முன்னணி பிராண்டுகள்**



எப்போதும் போல், சோர்ஸிங், வரவிருக்கும் ஹோம் ஃபேஷன் டிரெண்ட்ஸ், அறிவு பகிர்வு, சந்தை தகவல்கள் மற்றும் புதிய வணிக வாய்ப்புகள் அடிப்படையில் ஹோம் பிஸ்னஸ் சகோதரத்துவத்திற்கான பலனளிக்கும் அனுபவத்தை HGH இந்தியா வழங்குகிறது. வர்த்தக கண்காட்சி புதிய தயாரிப்பு வகைகள் மற்றும் புதிய கண்காட்சியாளர்களைச் சேர்ப்பதன் மூலம் சந்தை அடிப்படையிலான அணுகலை பின்பற்றி, பையர்கள் போட்டித்தன்மையுடன் இருப்பதற்காக அவர்களின் சோர்ஸிங் ஆப்ஷன்களை மேலும் மேம்படுத்த உதவுகிறது.

ஹோம் டெக்ஸ்டைல்ஸ் முதல் ஹோம் ஃபர்னிச்சர் வரை; மேட்ரஸஸ் முதல் சோஃபாக்கள், குஷன் கவர்கள் மற்றும் ரெடிமேட் கர்டன்கள் வரை; அழகிய ஃபர்னிச்சர்கள் முதல் அலங்கார பொருட்கள் வரை; குக்வேர் மற்றும் கிச்சன்வேர் முதல் டேபிள்வேர் வரை, HGH இந்தியா பலவகையானவற்றை வழங்குகிறது மற்றும் ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெக்கர், ஹோம் ஃபர்னிச்சர், ஹவுஸ்வேர் மற்றும் கிஃப்ட்ஸில் தங்களின் புதிய கலெக்ஷன்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவதற்கான வாய்ப்பை மெர்சண்டைசர்கள் மற்றும் பையர்களுக்கு வழங்குகிறது.

ஹோம் டெக்ஸ்டைல்ஸில், மாஸ்பர், ஸ்ப்ரெட் ஹோம், மைக்ரோ காட்டன், அர்விந்த், பியான்கா, நாட்டிகா, போநெயூர், பனோ, ரத்தன் டெக்ஸ்டைல்ஸ் போன்ற பல முன்னணி பிராண்ட்கள், தங்களின் புதிய மெத்தை, பாத் மற்றும் மேட்-அப்ஸின் ப்ரீமியம் வகைகளை அறிமுகம் செய்கிறார்கள். ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்ஸ், ப்ளைன்ட்ஸ் & கர்டன்களில், J & Y, IFI (கிரீஸ்), அல்கெமி, ஹோம் ஃபேப்ரிக்ஸ், வியன்டோ, ஃபைன் டெக்கர், பர்பிள் மேஸ், டாப்மேன் மற்றும் பல பிராண்ட்களிடமிருந்து புதுமைகள் + டிசைன் + மதிப்பின் கலவையை பையர்கள் எதிர்பார்க்கலாம்.

அப்செஷன்ஸ் அதன் புதிய ரக் வகைகளையும், அத்துடன் குப்பை தொட்டிகள் மற்றும் குளியல் பொருட்களையும் அறிமுகம் செய்யவுள்ளன. கலீன் மற்றும் ஃப்ளோரிஸ்டாவும் ஏரியா ரக்ஸின் சமீபத்திய கலெக்ஷன்களைக் கொண்டுவருகின்றன.

இந்தியா, ஜெர்மனி, இத்தாலி, U.K., பிரான்ஸ், பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, கனடா, ஜப்பான், ரஷ்யா, உக்ரைன், சீனா, மலேசியா, தாய்லாந்து, இலங்கை, கொரியா, தைவான், பிரேசில், ஆஸ்திரேலியா, UAE, மற்றும் பல நாடுகளிலிருந்து 2500+ தயாரிப்புகளுடன், HGH இந்தியா பல்வேறு வகைகளில் பார்வையாளர்களுக்கான பல்வேறு புதிய வணிக யோசனைகளைத் தூண்டும்.

**HGH இந்தியா ஜூலை 2024**
**பார்வையாளர்களுக்கான நேரம்**

ஜூலை 2 காலை 9 முதல் மாலை 6.30 வரை

ஜூலை 3 காலை 9 முதல் மாலை 6.30 வரை

ஜூலை 4 காலை 9 முதல் மாலை 6.30 வரை

ஜூலை 5 காலை 9 முதல் மாலை 5.30 வரை

## அரசாங்கத்தின் உதவி

HGH இந்தியாவின் முந்தைய எடிஷனின் நல்ல வணிக முடிவுகளின் அடிப்படையில், இந்திய அரசாங்கத்தின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள கைவினை தொழில் மேம்பாட்டு ஆணையர், அதன் கீழ் செயல்படும் பல்வேறு அமலாக்க முகமைகள் மூலம், நாடு முழுவதிலுமிருந்து HGH இந்தியாவில் பங்கேற்பதற்காக கைவினை கலைஞர்களுக்கு முழுமையான உதவியை வழங்குகிறது. கைவினைப்பொருட்களுக்கான ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் (EPCH), தனித்துவமான கைவினை பொருட்களில் நிபுணத்துவம் பெற்ற வெவ்வேறு குழுக்களிலிருந்து 20 கைவினை கலைஞர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் குழு பங்கேற்பை ஏற்பாடு செய்துள்ளது. வடகிழக்கு கைவினை - கைத்தறி மேம்பாட்டு நிறுவனத்தின் (NEHHDC) கீழ் இன்னும் 20 கண்காட்சியாளர்கள் பிரம்பு, மூங்கில், மரம், எரி பட்டு மற்றும் தாசர் பட்டில் செய்யப்பட்ட பலவகையான கைவினை பொருட்களைக் காட்சிப்படுத்துகிறார்கள். தேசிய வடிவமைப்பு மையமும் (NDC) 20 கண்காட்சியாளர்களைக் கொண்டுவந்து அவர்களுக்கு வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு உதவியை வழங்குகிறது.

அதே போல், ஜவுளித்துறை அமைச்சகத்தின் கைத்தறி மேம்பாட்டு ஆணையமும், கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய வடிவமைப்பு மையம் மூலம் உதவியை வழங்கியுள்ளது. இந்த இரண்டு அமைப்புகளும் கைத்தறி வீட்டு ஜவுளி தயாரிப்புகளின் குழு பங்கேற்பை ஏற்பாடு செய்தது.

HGH இந்தியா, இந்திய அரசாங்கத்தின் MSME அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கண்காட்சிகளில் ஒன்றாக உள்ளது, இதன் மூலம் அமைச்சகத்துடன் பதிவு செய்துள்ள சிறு மற்றும் குறு நிறுவனங்கள் HGH இந்தியாவில் காட்சிப்படுத்துவதற்கான அவர்களின் செலவை பகுதியாக திரும்பப்பெற்றுக்கொள்ளலாம். உத்தரப்பிரதேச அரசாங்கத்தின் ODOP திட்டத்தின் கீழும், ஹரியாணா அரசாங்கத்தின் MDA திட்டத்தின் கீழும் HGH இந்தியா அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசாங்கத்தின் MSME அமைச்சகத்தின் கீழ் FAME TN அந்த மாநிலத்திலிருந்து 10 கண்காட்சியாளர்கள் பங்கேற்க உதவுகிறது.

INDIAN INSTITUTE OF INTERIOR DESIGNERS
MUMBAI REGIONAL CHAPTER

## IIID இணைப்பு

ஆர்கிடெக்ஷர், இன்டீரியர் டிசைனர் மற்றும் IIID உறுப்பினர்களுடன் HGH இந்தியாவின் விரிவான பலன்களைப் பகிர்ந்து கொள்வதற்காக, மும்பை அத்தியாயத்தின் இந்தியன் இன்டீரியர் டிசைனர்ஸ் நிறுவனத்துடன் (IIID) HGH இந்தியா தொடர்ந்து ஒன்று சேர்த்து செயல்பட்டு வருகிறது. ஒரு துணை தொழில்முறை நிறுவனமாக, HGH இந்தியாவில் உள்ள பல்வேறு வணிக சலுகைகளை அதன் உறுப்பினர்களுக்கு முன்னிலைப்படுத்த IIID உதவும். இந்த வர்த்தக கண்காட்சி இந்தியா முழுவதிலுமிருந்து கண்காட்சியாளர்களையும், 32 நாடுகளிலும் பலவிதமான ஹோம் ஃபர்னிச்சர், ஃபர்னிஷிங் ஃபேப்ரிக்ஸ், டெகரேட்டிவ் மேட்-அப்ஸ், ஃப்ளோரிங், ஹோம் டெகார் சொல்யூஷன்ஸ், மெத்தைகள், மேசைப் பொருட்கள், சமையலறை உபகரணங்கள், சமையல் பாத்திரங்கள் மற்றும் பொது ஹவுஸ்வேர் ஆகியவற்றை காட்சிப்படுத்துகிறது.. ஆர்கிடெட்கள் மற்றும் இன்டீரியர் டிசைனர்களுக்கு, HGH இந்தியா அவர்களின் கட்டுமான திட்டங்களுக்கு ஒருங்கிணைந்த வடிவமைப்பு மற்றும் ஆதார தீர்வுகளைக் கண்டறிய விலைமதிப்பற்ற வாய்ப்பை வழங்குகிறது. இந்த நிகழ்வானது உற்பத்தியாளர்கள், பிராண்டுகள், விநியோகஸ்தர்கள் மற்றும் கைவினை மையங்களை நேரடியாக தொடர்பு கொள்ள உதவுகிறது, தொழில் வல்லுநர்கள் ஒருங்கிணைந்த ஹோம் டிசைன் சொல்யூஷனை ஒரே இடத்தில் கிடைக்க செய்கிறது.



**கேதன் ஷெத்**
*தலைவர், IIIDD, MRC*

IIID தலைவராக, ஒட்டுமொத்த ஆர்கிடெட்கள் மற்றும் இன்டீரியர் டிசைனர்களின் சகோதரத்துவத்திற்கு HGH இந்தியா மிகவும் இணக்கமாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதாக கருதுகிறேன். சாஃப்ட் ஃபர்னிஷிங்ஸ், ஃபர்னிச்சர், டெகரேட்டிவ் பொருட்கள், ஃபர்னிஷிங்குகள், மெத்தைகள், டேபிள் பொருட்கள் மற்றும் இந்தியாவிற்கேற்ற ஸ்மார்ட் சமையலறை பொருட்கள் போன்றவற்றை பல்வேறு நாடுகளிலிருந்து பலவிதமான வகைகளில் ஒரே இடத்தில் காண முடியும் என்பது மட்டுமல்லாமல், வரவிருக்கும் வீட்டு பேஷன் டிரெண்ட்கள், டிசைன்ஸ், மெட்டீரியல் மற்றும் கலர்கள் பற்றியும் தெரிந்து கொள்ளலாம் HGH இந்தியாவில் கலந்துகொள்வதன் மூலம், கட்டடக் கலைஞர்கள், குறிப்பாக இன்டீரியர் டிசைனர்கள் ஒரே இடத்தில் பல தீர்வுகளையும் நீண்டகால பார்ட்னர்களையும் காணலாம் என்று நான் கருதுகிறேன்.

மேலும், HGH இந்தியா மதிப்புமிக்க நெட்வொர்க்கிங் வாய்ப்புகளைத் வழங்குகிறது, கட்டிடக் கலைஞர்கள் மற்றும் டிசைனர்கள், உற்பத்தியாளர்கள், சப்ளையர்கள் மற்றும் சக தொழில் வல்லுநர்களுடன் நேரடி தொடர்புகளை ஏற்படுத்த அனுமதிக்கிறது, இது பயனுள்ள ஒத்துழைப்பு மற்றும் மேம்பட்ட திட்ட விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

ஜூலை 2-5 முதல் மும்பை கண்காட்சி மையத்தில் HGH இந்தியாவில் சந்திப்போம்.

## H- சர்க்கிள் அவார்ட்ஸ்



கடந்த ஆண்டு HGH இந்தியா தொடங்கிய எச்-சர்கிள் அவார்ட்ஸ், இரண்டு பதிப்புகளுடன் ஹோம் ப்ராடக்ட்ஸ் டிரேட் மற்றும் தொழில்துறையில் அதிக மரியாதையையும் பிரபலத்தையும் பெற்றுள்ளன.

இந்தியாவில் ஹோம் ப்ராடக்ட்ஸ் பிரிவில் டிசைன், மெட்டீரியல் மற்றும் செயல்பாட்டில் புதுமைகளை அங்கீகரித்து ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட எச்-சர்கிள் அவார்ட்ஸ் அனைத்து கண்காட்சியாளர்களும் இலவசமாக பரிந்துரைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். ஒரு கண்காட்சியாளர், கூறப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அதிகபட்சம் இரண்டு ப்ராடட்களை அவார்டிற்கு பரிந்துரைக்க முடியும்.

முன்னணி ரீடெய்ல் விற்பனையாளர்கள், அனைத்து நாமினிக்கள், கண்காட்சியாளர்கள், பிற பிரமுகர்கள் மற்றும் விஐபி அழைப்பாளர்கள் முன்னிலையில் ஜூலை 2 ஆம் தேதி HGH இந்தியாவில் உள்ள கிராண்டே ஹாலில் நடைபெறவிருக்கும் எச்-சர்க்கிள் அவார்ட் டிராஃபி வழங்கப்படும். வெற்றியாளர்கள் தங்கள் சொந்த மார்க்கெட்டிங் மற்றும் விளம்பரங்களுக்கு அவார்டைப் பயன்படுத்தலாம்.

எச்-சர்க்கிள் அவார்ர்கள் பொதுவாக போட்டித்தன்மையை ஊக்குவிக்க வழங்கப்படுவதில்லை, ஆனால் ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் ஃபர்னிச்சர், டெகரேட்டிவ் பொருட்கள், கைவினைப்பொருட்கள், ஹவுஸ்வேர் மற்றும் பரிசுகள் போன்ற பல்வேறு தயாரிப்பு வகைகளில் புதுமைகளின் தகுதியான முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகிறது. கண்காட்சியாளர்கள் மேலும் விவரங்களுக்கு நாமினேஷன் படிவத்தைப் பார்க்கலாம்.

முன்னணி ரீடெய்ல் விற்பனையாளர்கள், ப்ராடக்ட் டிசைனர்கள், கட்டிடக் கலைஞர், இன்டீரியர் டிசைனர் மற்றும் கல்வியாளர் ஆகியோரைக் கொண்ட ஒரு ஐந்து உறுப்பினர் ஜூரி வெற்றியாளர்களைத் தீர்மானிக்க நாமினேஷன்களை மதிப்பீடு செய்வார்கள். நாமினேஷன் நபர்களைத் தவிர, வர்த்தக மற்றும் தொழில்துறை தலைவர்கள், முன்னணி கட்டிடக்கலை நிபுணர்கள் மற்றும் IIID விருந்தினர்கள் எச்-சர்க்கிள் விருதுகள் இரவில் கலந்து கொள்ள அழைக்கப்படுவார்கள். அழைப்பின் பேரில் மட்டுமே வருகை இருக்கும்.

எச்-சர்க்கிள் அவார்ட்கள் HGH இந்தியாவால் இந்த பதிப்பில் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டீரியர் டிசைனர்ஸ் (IIID) உடன் இணைந்து வழங்கப்படவுள்ளது, HGH இந்தியா புதுமை மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்த முயற்சிக்கிறது, நம்பிக்கைக்குரிய சப்ளையர்களை அடையாளம் காண்பதில் பையர்களுக்கு உதவுகிறது.

**ஹோம் டெக்ஸ்டைல்ஸ் | ஹோம் டெகார் | ஹோம் ஃபர்னிச்சர் | ஹவுஸ்வேர் | கிஃப்ட்ஸ்**

## இன்டீரியர் டிசைன் மாநாடு

IID, MRC, HGH இந்தியா உடனான தனது தொடர்பைத் தொடர்ந்து, விளக்கக்காட்சிகள் மற்றும் குழு விவாதங்களை உள்ளடக்கிய ஒரு மாநாட்டு திட்டத்தை ஏற்பாடு செய்திடும். 2024 ஆம் ஆண்டு ஜூலை 3 ஆம் தேதி மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாநாடு 3வது ஹாலில் நடைபெற உள்ளது, இதில் பல்வேறு தலைப்புகளில் தகவல்களை பெற்றிடலாம். HGH இந்தியாவின் கட்டிடக் கலைஞர்கள், இன்டீரியர் டிசைனர் மற்றும் அனைத்து கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்களும் இதில் பங்கேற்கலாம். இந்த மாநாட்டில் கலந்து கொள்ள கட்டணம் இல்லை என்றாலும், கட்டாயம் விவரங்களை பதிவு செய்ய வேண்டும். நீங்கள் கலந்து கொள்ள விரும்பினால், நீங்கள் ஆன்லைனில் www.hghindia.com என்ற கண்காட்சி இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

### தலைப்புகள் & பேச்சாளர்கள்

1. **நேரம்: 2.30 pm - 3.00 pm**

   **தலைப்பு: BIM & AI ஒன்றாக: இண்டீரியர் டிசைன் பணியில் AI-இன் தாக்கம் / இண்டீரியர் டிசைன் மற்றும் ஆர்கிடெக்சர் பணியில் BIM-ஐ செயல்படுத்துதல்**

   **பேச்சாளர்கள்:** Ar. மணீஷ் தீக்ஷித், *பார்ட்னர், அவும் ஆர்கிடெக்ட்*

   Ar. ஷிவாங் ராஜ்வீர், *சீஃப் ஸ்டிராடெஜிஸ்ட், டைமென்ஷன் ப்ளஸ்*

2. **நேரம்ள்: 3.00 pm-3.30 pm**

   **தலைப்பு: இடம், மக்கள் மற்றும் பூமிக்காக வடிவமைத்தல்**

   **பேச்சாளர்:** Ar. யத்தின்பாய் பாண்டியா,

   *ஃபுட்ப்ரின்ட்ஸ்- எர்த், CEPT பல்கலைக்கழகத்தின் டீன், அகமதாபாத்*

3. **குழு கலந்துரையாடல்: 3.35 pm - 4.30 pm**

   **தலைப்பு: வளர்ந்து வரும் டிரெண்ட்களுக்கேற்ப ஆடம்பரமான வீடுகள்/இன்டீரியரில் டிசைன் மற்றும் டெக்னாலஜியினை ஒருங்கிணைத்தல்**

   **நடுவர்:** திரு. மெஹுல் கம்தார், *நிறுவனர், அஸீர் டெக்னாலஜிஸ்*

   **பேனலிஸ்ட்ஸ்:** Ar. நிஷேல் ஷெட்டி, *நிறுவனர் மற்றும் முதன்மை கட்டிடக் கலைஞர், நிஷீல் ஷெட்டி, ஆர்கிடெட்கள்,*

   Ar. பாவ்னா ஜேக்கப், *உரிமையாளர், பாவ்னா ஜேக்கப்ஆர்கிடெக்ட்ஸ்,*

   Ar. மிஹிர் கோட்டக், *முதன்மை கட்டிடக் கலைஞர் 4த் டைமன்ஸன்,*

   திரு. முர்தாசா மங்லோரேவாலா, *இணை துணைத் தலைவர் (குரூப் ப்ராடக்ட் ஹெட்), நில்கமல் லிமிடெட்,*

   திரு. மோஹித் மோடி,

   *இயக்குனர், ஸ்ப்ரெட் ஹோம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்.*

HGH இந்தியா பார்வையாளர்கள் இந்த நிகழ்வுகளின் தலைப்புகள் பற்றிய விரிவான விவரத்தினை HGH இந்தியா இணையதளமான www.hghindia.com இல் காணலாம்.


# கலாச்சாரக் குறியீடுகள்: டிரெண்ட்ஸ் 2024-25

'கலாச்சாரக் குறியீடுகள் - அடையாளம் & ஆர்வம்' இந்திய நுகர்வோரை அடையாளப்படுத்துகிறது, இந்திய வாடிக்கையாளர்கள் நவீன தொழில்நுட்பம் மற்றும் அவர்களின் வாழ்க்கைமுறையில் உலகளாவிய தாக்கங்களுடன் இந்திய பாரம்பரியங்களின் கலவையை எதிர்பார்க்கிறார்கள்.

கலாச்சாரக் குறியீடுகள்- 2024-25 இலையுதிர்/குளிர்காலத்திற்கான டிரெண்டுகள், நுகர்வோர் எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் வண்ணங்கள், டிசைன்கள், ஸ்டைல் மற்றும் பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருட்களை காட்சிப்படுத்தவுள்ளன. இது சந்தைப் பிரிவுகளில் இந்திய நுகர்வோரின் மாறிவரும் விருப்பங்களை பிரதிபலிக்கும் வகையில் இருக்கும். ஹால் 1 இல் உள்ள டிரெண்ட்ஸ் பெவிலியனில் பிரத்யேகமாக தயாரிக்கபப்பட்ட டிரெண்ட் புக் மூலம் ப்ராடக்ட்களின் அசல் வெளிப்பாட்டின் வாயிலாக HGH டிரெண்ட்ஸ் காட்சிப்படுத்தப்படும்.

இந்த டிரெண்டுகள் ஒரு அனுபவமிக்க சர்வதேச வடிவமைப்புக் குழுவின் முழுமையான ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை, மேலும் HGH இந்தியா கண்காட்சி, கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு ப்ராடக்ட் டிசைனிங்கிற்கும் மற்றும் வரவிருக்கும் சீசனிற்கான புதிய கலெக்ஷன்களை விற்பனை செய்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

கலாச்சாரக் குறியீடுகளின் டிரெண்ட்ஸ் குறிப்பாக இந்திய சந்தைக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன மற்றும் அனைத்து வீட்டு வகைப்பாட்டிலும் இவை பொருந்தும் - வீட்டு ஜவுளி, வீட்டு அலங்காரப் பொருட்கள், வீட்டு ஃபர்னிஷிங்குகள், வீட்டு அலங்காரம்,




வீட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுகள். அவை நான்கு துணைக் குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

**1. சாஃப்ரன் ஸ்கை**

**2. கார்ஜியஸ் கார்டன்**

**3. கேன்டி கன்ட்ரி**

**4. இன்டியூஷன் ஐலேண்ட்**

15வது HGH இந்தியா 2024 இல் உள்ள ஹால் 1 இல் அமைந்துள்ள டிரெண்ட்ஸ் பெவிலியன், HGH இந்தியா கண்காட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட அசல் தயாரிப்புகளின் டிரெண்ட்களை காண்பிக்கும், இதன் மூலம் ஹோம் டிசைன், லைஃப் ஸ்டைல், வீட்டு அலங்காரம் மற்றும் வீட்டை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்களுக்கான யோசனைகளை நிஜமாக்கிடலாம். கலாச்சாரக் குறியீடுகள் டிரெண்ட்ஸ் பெவிலியன் என்பது ரீடெய்ல் விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள், பிராண்டுகள், கட்டிடக் கலைஞர்கள், இன்டீரியர் டிசைனர்கள் மற்றும் ப்ராடக்ட் வடிவமைப்பாளர்கள் தொழிற் போட்டியில் முன்னேறி செல்ல உதவும்.

## Indian heritage
HANDICRAFTS | KHADI | COIR | JUTE

இந்திய பாரம்பரியம் பல நூற்றாண்டுகளாக திறமையான கலைஞர்கள், கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களின் கைகளில் பல்வேறு அழகியல் வடிவங்களைப் பெற்றுள்ளது. உலோகம், மரம், பீங்கான், டெரகோட்டா, கண்ணாடி, ஜவுளி, கரும்பு, மூங்கில் மற்றும் பல்வேறு இயற்கை மற்றும் சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பொருட்களில் இருந்து கைவினைப்பொருட்கள் உருவாக்குவது முதல்; கலை, ஓவியங்கள், அச்சிடுதல், எம்பிராய்டரி வரை பல்வேறு வடிவங்களில் இந்திய கைவினைப்பொருட்கள் மிகவும் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் நெகிழக்கூடிய வரலாற்றைக் கொண்டுள்ளது.

ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெகார், ஹோம் ஃபர்னிச்சர், ஹவுஸ்வேர் மற்றும் பரிசுப் பொருட்கள் போன்றவற்றில் இந்திய வீடுகளுக்கு ஒரு தனித்துவமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டு வருவதற்கு இந்தத் திறன்கள் மற்றும் கைவினைப்பொருட்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்திய பாரம்பரியம் என்ற பிராண்டின் கீழ்





HGH இந்தியாவின் இந்த 15வது பதிப்பில் இந்தியாவின் வளமான கலாச்சார, நெசவு மற்றும் கைவினை பாரம்பரியத்தை HGH இந்தியா தொடர்ந்து ஊக்குவித்து காட்சிப்படுத்தவுள்ளது. 2018 முதல் HGH இந்தியாவின் இந்த முயற்சி இந்திய கைவினை கலைஞர்கள் தங்கள் தயாரிப்புகளான கைவினைப்பொருட்கள், அலங்கார பாகங்கள், வீட்டு ஃபர்னிஷிங்குகள், கையால் தயாரிக்கப்பட்ட தரைவிரிப்புகள், ஹேண்ட்லூம் மற்றும் காதியை தளமாகக் கொண்ட வீட்டு ஜவுளி, மூங்கில் & கரும்பு பொருட்கள், கோயர் & சணல் தயாரிப்புகள், ஹவுஸ் பொருட்கள், பரிசுகள் மற்றும் பேஷன் பாகங்களை காட்சிப்படுத்தி பிரபலமடைய உதவி வருகிறது. இந்திய பாரம்பரிய மேம்பாட்டு பிரிவில் கைவினைப்பொருட்கள் மேம்பாட்டு ஆணையர், டெவலப்மென்ட் கமிஷனர் கைத்தறி, ஜவுளி அமைச்சகம் மற்றும் MSME அமைச்சகம், இந்திய அரசு ஆகியோரின் ஆதரவினை பெற்று வருகிறோம்; பல்வேறு தனிப்பட்ட நிறுவனங்கள், தீம் பெவிலியன்கள், டிரெண்ட்கள் பெவிலியன் மற்றும் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு ஸ்பான்சர் செய்யப்பட்ட ஏஜென்சிகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் தேசிய விருது பெற்ற பல்வேறு கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் குழுவினரும் இந்த கண்காட்சியில் பங்குபெறவுள்ளனர். பழமையான கலை, கைவினை மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதே இந்த பிரிவின் சிறப்பம்சமாகும்

இந்திய பாரம்பரியம் மூலம், ரீடெய்ல் விற்பனையாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், இன்டீரியர் டிசைனர்ஸ், நிறுவன மற்றும் தனிப்பட்ட பரிசு கொள்முதல் செய்பவர்கள் இந்தியா முழுவதிலும் உள்ள மிகவும் திறமையான மற்றும் திறன்மிக்க கைவினைஞ கலைஞர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம் மற்றும் அவர்களின் கடைகளுக்கு தனித்துவமான மதிப்பைச் சேர்க்க, அவர்களின் பல்வேறு தயாரிப்புகளை தொடர்ந்து வாங்கிடலாம். இதுதவிர இந்த கண்காட்சி, நன்கு அறியப்பட்ட கைவினை கலைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் கலைஞர்கள் வருமானத்தை ஈட்டுவதற்கும், அவர்களுக்கான தொழில் வளர்ச்சியினை உறுதி செய்வதற்கும், நாட்டின் கலாச்சார மற்றும் சமூக-பொருளாதார கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கும் உதவுகிறது.

ஹால் 2ல் உள்ள இந்திய பாரம்பரியம் என்ற தலைப்பில் ஒரு பெவிலியன், தலைசிறந்த கைவினை கலைஞர்கள், தேசிய விருது பெற்ற பல பிரபலமான கலைஞர்களின் திறனை நேரடியாக காட்சிப்படுத்திடும். மட்பாண்டங்கள், மரம் மற்றும் உலோக கைவினை, கைத்தறி எம்பிராய்டரி, மர பொம்மைகள், கரும்பு மற்றும் மூங்கில் போன்றவற்றை கொண்டு வீட்டு அலங்கார பயன்பாட்டிற்காக அதிக திறன்களைப் பயன்படுத்தி நேர்த்தியாக கையால் வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகளை உருவாக்குகிறார்கள் இந்தியா முழுவதிலும் உள்ள ரீடெய்ல் விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் மத்தியில் இந்த சிறந்த திறன்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த பெவிலியன் HGH இந்தியாவால் ஸ்பான்சர் செய்யப்படுகிறது.

World of Sleep

இந்திய ஸ்லீப் ப்ராடக்ட்ஸ் ஃபெடரேஷன் (ISPF) உதவியுடன் ஹால் 1 இல் அமைந்துள்ள HGH இந்தியா வழங்கும் வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியன், தூக்கத்தின் தரம் மற்றும் வசதியை மேம்படுத்துவதற்காக மெத்தைகள், தலையணைகள் மற்றும் கம்ஃபோர்டர்ஸ் பிரிவுகளில் புதுமைகளை அறிமுகப்படுத்துவதில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. இந்திய நுகர்வோர் தங்கள் அன்றாட வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவதில் தூக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துவருவதால், இந்தியாவில் ஸ்லீப் சொல்யூஷன்ஸ் தொழில் அதிக வளர்ச்சியை சந்தித்து வருகிறது.

இந்தியாவில் ஸ்லீப் சொல்யூஷன்ஸ் பிரிவு படுக்கைகள் மற்றும் மெத்தைகளையும் தாண்டி வளர்ச்சியடைந்து வருகிறது, நுகர்வோருக்கு தரமான தூக்கத்தினை வழங்கும் வகையில் இப்போது கண் மாஸ்க்குகள், இயர் ப்ளக்ஸ், ஒயிட் நாய்ஸ் மெஷின்ஸ், தூக்க கண்காணிப்பு மற்றும் சுவாச சாதனங்கள், குறட்டையை தவிர்க்க செய்யும் ஸ்ப்ரேக்கள் மற்றும் பணிச்சூழலியலுக்கு ஏற்ற தலையணைகள் போன்ற பல்வேறு அளவிலான தயாரிப்புகளை அறிமுகம் செய்து வருகிறது. தூக்கமின்மையின் மன, உடல் மற்றும் பொருளாதார செலவுகள் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து, நுகர்வோர் தங்கள் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்த புதிய தீர்வுகளை எதிர்நோக்குகின்றனர். இருப்பினும், இந்தியாவில், ஸ்லீப் தொழிற்துறை தொடர்ந்து மெத்தைகள் மற்றும் படுக்கை விரிப்புகளால் மட்டுமே ஆதிக்கம் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவே இத்துறையில் மிகப் பெரிய பங்காற்றி வருகிறது. இந்த பிரிவு 20 சதவீத கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்பிரிங்ஃபிட், நில்கமல் ஸ்லீப், கிங் கோயில், ரெஃப்ரெஷ், பெப்ஸ், சீலி, ஃப்ரெஷ் அப், சிம்மன்ஸ், செர்டா, ஸ்லீப்ஃப்ரெஷ் போன்ற முக்கிய மெத்தைகள் மற்றும் தலையணைகளின் பல பிராண்டுகள் ஹால் 1 இல் அமைந்துள்ள வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பிரிவின் கீழ் காட்சிப்படுத்தப்படும். இது தவிர, பார்வையாளர்கள் மேட்ரஸ் ப்ரொடெக்டர்ஸ், கம்ஃபோர்டர்கள், படுக்கைகள் மற்றும் பிற தூக்க தயாரிப்புகளையும் இந்த பிரிவில் காணலாம்.

**நில்கமல் ஸ்லீப்** அனைவருக்கும் பிரீமியம் தரத்திலான, தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் ஸ்லீப் சொல்யூஷன்களை வழங்குகிறது, இவை அனைவருக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு நபரின் தனித்துவமான தூக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த பிராண்ட் பலவிதமான மெத்தைகளை வடிவமைத்துள்ளது. HGH இந்தியாவில், நில்கமல் வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்க பல வேறு தயாரிப்புகளை காட்சிப்படுத்தவுள்ளது.

கூடுதல் கம்ஃபோர்டிற்கான அம்சங்கள் மற்றும் பிரீமியம் ஃபேப்ரிக்குகள் மூலம் **ஆழ்ந்த தூக்கத்தினை** அனுபவித்திடலாம். அசைவுகளால் ஏற்படும் அசௌகரியத்தை குறைக்கும் புதுமையான தொழில்நுட்பத்தைக் கொண்ட **கப்புல் ப்ரோ** மெட்ரேஸஸ், தம்பதிகளின் தடையின்றி தூக்கத்திற்கு துணை நின்றிடும். ஹோட்டல்களில் கிடைக்கும் லக்சுரியான வசதி மற்றும் சுப்பீரியர் சப்போர்ட் இனி வீடுகளிலும் கிடைத்திடும். டார்கெட்டட் ஆர்த்தோபீடிக் சப்போர்ட் மற்றும் அழுத்தம் நிவாரணத்திற்கான **ஹெல்த் ப்ரோ,** முதுகெழும்பு சீரமைப்பு மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை ஊக்குவிக்கிறது. **டெக்னோ ஸ்லீப்** தூக்கத்தைக் கண்காணிக்கும் அட்வான்ஸ்ட் சென்சார்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் உங்கள் தூக்க முறைகளை கண்காணிக்கும் ஒருங்கிணைந்த AI உங்கள் உடலின் தேவைகளுக்கு ஏற்ப நிகழ்நேர சப்போர்ட் போன்றவற்றை வழங்குகிறது.

நில்கமல் தங்களது புரட்சிகரமான **பவுன்ஸ் ஃபோம்** மெத்தைகளையும் அறிமுகப்படுத்தவுள்ளது. அதன் தனித்துவமான, காப்புரிமை பெற்ற தொழில்நுட்பமானது, மெமரி ஃபோமின் இலகுவான வசதியை ஒரு ஸ்பிரிங் மெத்தையின் மென்மையான துள்ளலுடன் இணைத்து, இணையற்ற அற்புதமான தூக்க அனுபவத்தை வழங்கிடும். இதன் உயர்ந்த காற்று சுழற்சி இந்தியாவின் வெப்பமண்டல காலநிலைக்கு மிகவும் பொருத்தமாகவே இருக்கும்.

**சீலி இந்தியா** தங்கள் உற்பத்தி பிரிவை ஹைதராபாத்தில் தொடங்கியுள்ளது, இவர்கள் தங்கள் முதல் மெத்தை வகையினை (இந்திய தயாரிப்பு) HGH இந்தியா J24 இல் அறிமுகப்படுத்தவுள்ளார்கள்,



சீலி இந்தியா



நில்கமல் ஸ்லீப்

1881 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சீலி, மெத்தை துறையில் புகழ்பெற்ற உலகளாவிய பிராண்டாகும். இந்தியாவில், சீலி, பிரீமியம் பெட்டிங் சொல்யூஷன்ஸை விரும்பும் வாடிக்கையாளர்களுக்கான பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய வளமான பாரம்பரியத்துடன், சீலி, சிறந்த தூக்க அனுபவத்தை வழங்க புதுமை மற்றும் தரத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

சீலி மெத்தைகள் அட்வான்ஸ்டு கம்ஃபோர்ட் லேயர்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன, அவை உடலை தொட்டிலில் இருப்பது போல வைத்துக் கொள்வதால் உடலின் அழுத்தம் குறைந்து, ஆழ்ந்த உறக்கம் மற்றும் ஓய்வை மேம்படுத்துகின்றன. முதுகெலும்பு சீரமைப்பில் கவனம் செலுத்துவதன் மூலம், சீலி மெத்தைகள் சரியான தோரணையை உறுதிப்படுத்தவும் தூக்கத்தின் போது அசௌகரியத்தை குறைக்கவும் உகந்த ஆதரவை வழங்குகின்றன.

மெமரி ஃபோம், ஜெல்-இன்ஃப்யூஸ்டு ஃபோம் மற்றும் இன்னர்ஸ்பிரிங் சிஸ்டம்ஸ் போன்ற உயர்தர பொருட்களைப் பயன்படுத்தி, சீலி மெத்தைகள் நீடித்துழைக்கும், மீள்தன்மை கொண்ட மற்றும் நீண்ட கால கம்ஃபோர்ட்டை வழங்குகின்றன. கூலிங் ஜெல் தொழில்நுட்பம், ஸ்பான்ஸிவ் சப்போர்ட் காயில்கள் மற்றும் மோஷன் ஐசோலேஷன் சிஸ்டம்கள் போன்ற அம்சங்கள் தடையற்ற மற்றும் மறுசீரமைப்பு தூக்க அனுபவத்திற்கு பங்களிக்கின்றன.

HGH இந்தியாவில், சீலி மாறுபட்ட தூக்க விருப்பங்களுக்கு ஏற்றவாறு பல்வேறு அளவிலான மெத்தை விருப்பங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்தியாவின் முன்னணி பிரீமியம் மெத்தை பிராண்டான **ஸ்பிரிங்ஃபிட்** உலகளவில் நேர்த்தியான, ஆடம்பரமான ஸ்லீப் சொல்யூஷன்சை வழங்கி வருகிறது. இந்த பிராண்டின் மெமரி ஃபோம், பாக்கெட் ஸ்பிரிங் முதல் ஆர்கானிக் லேடெக்ஸ் மெத்தைகள் வரை கம்ஃபோர்ட் மற்றும் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது. இவர்களது சமீபத்திய தயாரிப்பு போர்ட்ஃபோலியோ ஆரோக்கியமான தூக்கத்தை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிராண்டான **ஆர்கனா,** புத்துணர்வான தூக்கத்தைப் பெற ஆர்கானிக் லேடெக்ஸ் மெத்தைகளை காட்சிப்படுத்தவுள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, கனடா, தாய்லாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் கிடைக்கும் இந்த வரம்பில் லேடக்ஸ் மெத்தைகள், தலையணைகள் மற்றும் டாப்பர்கள் உள்ளன, இது நிலையான வசதியை உறுதி செய்கிறது. இந்தியாவில், இந்த பிராண்டு ஸ்பிரிங்ஃபிட் என குறிப்பிடப்படுகிறது.

**சிம்மன்ஸ் பியூட்டிரெஸ்ட்,** மற்றொரு லக்சுரி மெத்தைகள் பிராண்டு, மிக சிறந்த கம்ஃபோர்ட் சப்போர்ட், மற்றும் நீடித்துழைக்கும் திறனுடன் காப்புரிமை பெற்ற தொழில்நுட்பத்துடன் புதுமையான



சிம்மன்ஸ் பியூட்டிரெஸ்ட்

டிசைன்களை ஸ்பிரிங்ஃபிட் வழங்கி வருகிறது

பிரீமியம் மெத்தை பிரிவில் முன்னணியில் உள்ள **செர்டா,** 90 ஆண்டுகால புதுமைப் பாரம்பரியத்துடன் உயர்தர ஸ்லீப் சொல்யூஷன்களை வழங்குகிறது. HGH இந்தியாவில் தங்கள் புதிய இரண்டு லக்சுரி தலையணைகளை அறிமுகப்படுத்தவுள்ளனர்: ஐ லேடெக்ஸ் - ஆர்கானிக் மற்றும் அண்டார்டிக், சூழலுக்குகந்த வகையில் வசதியாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்பு.




வர்த்தக பார்வையாளர்கள்!
20' ஜூன், 2024க்குள்
**ஆன்லைனில் பதிவு செய்து**
**₹1,000/- சேமித்திடுங்கள்**
**ஸ்பாட் பதிவு கட்டணம்**
பதிவு செய்ய இப்போதே ஸ்கேன் செய்திடுங்கள்!
QR குறியீடு

மேலும் தகவல் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்ளவும்

**அமர் சர்மா** மொபைல்.: +91 99 676 00286/
**எலகா அன்சாரி** மொபைல்.: +91 99 301 72973
இமெயில்: visitors@hghindia.com